| | | |
|---|---|---|
| சாட்சி : DW 1<br>திரு.அந்தோணிராஜ்<br>த.பெ. திரு.சவரிமுத்து | அ.வ.எண்.208/2017 | 05.02.2026 |

<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) எனது முதல்விசாரணை பிரமாண வாக்குமூல சங்கதிகள் நான் சொன்ன விபரங்கள் அடிப்படையில் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். 2ம் வாதி சின்னம்மாள் கடந்த 2 வருடங்களுக்கு முன்பாக இறந்து விட்ட விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். 1ம் வாதி பிரான்ஸிஸ் லியோ என்பவர் மைக்கேல் என்பவரின் மகன் என்றால் சரிதான்.

2) 3 முதல் 6 வாதிகள் 2ம் வாதி சின்னம்மாளின் மகள்கள் என்றால் சரிதான். 3ம் வாதி ரெத்தினமேரியின் கணவர் காலமாகிவிட்டார் என்றால் சரிதான். 4ம் வாதி ஆக்கின் சாலமேரி என்பவரது கணவர் மட்டுமே உயிருடன் உள்ளார் என்றால் சரிதான். 5ம் வாதி ரெஜினாமேரி திருமணம் செய்துகொள்ளவில்லை என்றால் சரிதான். 6ம் வாதி சகாயமேரியின் கணவரும் காலமாகிவிட்டார் என்றால் சரிதான். பிராதில் கண்ட 6 வாதிகளில் 1ம் வாதி பிரான்ஸிஸ் லியோவை தவிர இதர வாதிகள் அனைவரும் பெண்கள் என்றால் சரிதான்.

3) மேற்படி வாதிகள் அனைவருக்கும் 50 வயதிற்கு மேல் இருக்கும் என்றால் தெரியாது. 1முதல் 17 பிரதிவாதிகளில் 13ம் பிரதிவாதி அந்தோணிகுரூஸ், 14 பிரதிவாதி சிங்கராயர், 15ம் பிரதிவாதி அருள்மோகன், 16ம் பிரதிவாதி குழந்தை, 17ம் பிரதிவாதி ஜெனி மாட்டின் ஆகியோர் இவ்வழக்கில் ஆஜரின்மையால் மேற்படி பிரதிவாதிகளுக்கு எதிராக இவ்வழக்கில் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள விபரம் எனக்கு

தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி 17 பிரதிவாதிகளும் ஒரே தெருவில் குடியிருந்து வருகிறோம் என்றால் சரிதான்.

4) நாங்கள் அனைவரும் ஒரே வகையறாவை சேர்ந்தவர்கள் என்றால் சரியல்ல, வெவ்வேறு வகையறாவை சேர்ந்தவர்கள். வாதிகளும் எங்கள் தெருவை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான், 4,6 வாதிகள் வெளியூரில் உள்ளனர். எனது முதல்விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் வழக்கு சொத்து மைக்கேல் மற்றும் 4 நபர்களுக்கு உரிமையானது என்று கூறியுள்ளேன், மேற்படி 4 நபர்கள் யார் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் நான் 4 நபர்களுக்கு உரிமையானது என்று சொல்லவில்லை.

5) எனது முதல்விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் 3 வது பத்தியில் கடைசி 3 வரிகளில் வாய்க்காரமான பாகப்பிரிவினை எப்பொழுது ஏற்பட்டது என்றும், பூர்வ அப்டிலாம் உண்மைக்கு புறம்பான சங்கதிகளாகும் என்று கூறியுள்ளேன் அதற்கு பொருள் என்ன என்றால் தெரியாது. மைக்கேல் குடும்பத்திற்கு வாய்மொழியாக பாகப்பிரிவினை செய்து கொண்டார்களா, இல்லையா என்று தெரியுமா என்றால் தெரியாது.

6) மைக்கேல் குடும்பத்திற்கு வாய்மொழியாக பாகப்பிரிவினை செய்து கொண்டால் அருகில் இருக்கும் என்னையோ, இதர பிரதிவாதிகளையோ அழைக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதால் எனக்கு அவர்கள் வாய்மொழியாக பாகப்பிரிவினை செய்து கொண்டார்களா, இல்லையா என்று தெரியாது என்றால் சரிதான். பொதுவாக 20 வருடத்திற்கு முன்பு பட்டாவின் அடிப்படையிலேயே உரிமையாளர்கள் சொத்தை அனுபவித்து வந்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

7) நான் தாக்கல் செய்துள்ள 1980 ம் ஆண்டிற்குரிய அ பதிவேடான

பி.சா.ஆ.2 ஆவணத்தில் வழக்கு சொத்து உள்ள புல எண்.70/6B யில் உரிமையாளர் பெயர் என்னவாக காட்டப்பட்டுள்ளது என்றால் மைக்கேல் மற்றும் 6 பேர் என்று காட்டப்பட்டுள்ளது. வழக்கு சொத்தான புல எண்.70/6B ற்கான பட்டா 1980 முதல் அதாவது சுமார் 46 ஆண்டுகளாக மைக்கேல் மற்றும் 6 நபர்கள் பெயரிலேயே உள்ளது என்றால் சரியல்ல, அவர்களாக ஏற்படுத்திக்கொண்டது.

8) பி.சா.ஆ.2 ஆவணத்தில் வாதிகள் ஏற்படுத்தியிருந்தால் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் அதனை நான் பெற்று எனது தரப்பில் தாக்கல் செய்யமுடியாது என்றாலும், அதனால் பி.சா.ஆ.2 ஆவணத்தில் வாதிகள் ஏற்படுத்தப்பட்டது என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து மைக்கேல் மற்றும் அவரது சகோதரர் சவரிமுத்துவிற்கு மட்டுமே சொந்தமானது என்றால் சரியல்ல, மைக்கேல் மற்றும் 6 நபர்களுக்கு சொந்தமானது.

9) மேற்படி 6 நபர்களுக்கு சொந்தமானது என்பதற்கான ஆவணம் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், தாக்கல் செய்யவில்லை. நான் சொல்வது போல் வழக்கு சொத்து மைக்கேல் மற்றும் 6 நபர்களுக்கு சொந்தமானது அல்ல என்பதால் தான் அதற்கான ஆவணத்தை என்னால் தாக்கல் செய்யமுடியவில்லை என்றாலும், நான் கூறுவது கற்பனையானது என்றாலும் சரியல்ல.

10) வழக்கு சொத்து எனக்கோ, இதர பிரதிவாதிகளுக்கோ பாத்தியப்பட்டது என்பதற்கு ஆதரவாக ஆவணம் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, உழவடை ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். பி.சா.ஆ.5 உழவடை ஆவணம் நான் எனக்கு சாதகமாக

நான் உருவாக்கிக்கொண்டது என்றால் சரியல்ல. பி.சா.ஆ.5 ல் அதில் உரிய அதிகாரிகளின் சான்றொப்பம் எதுவும் இல்லை என்றால் சரிதான், அப்போது அந்த வழக்கம் கிடையாது. பி.சா.ஆ.5 வழக்கு சொத்திற்கு உரியது அல்ல என்றாலும், அதில் கண்ட சொத்து எனக்கு உரிமையானது எனில், அதில் நான் எனது உரிமைமூல ஆவணத்தை இணைத்திருப்பேன் என்றாலும் சரியல்ல.

11) பி.சா.ஆ.5 ஆவணம் வழக்கு சொத்திற்கான உரிமை ஆவணம் அல்ல என்றாலும், கடனுக்காக மட்டுமே ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டது என்றாலும் சரியல்ல. பி.சா.ஆ.5 ஆவணம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்படாத ஆவணம் என்றால் சரிதான்.

(வழக்கு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)

ஒப்பம்/– ப. கோபாலஅரசி,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி.
இலால்குடி.

/உண்மை நகல்/

P GOPALA ARASI
Digitally signed by P GOPALA ARASI

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இலால்குடி.